# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.250/2022

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | யாகப்பன் |
| Father's Name | : | சூசை மரியநாடார் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.10.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 07.12.1970 தேதியில் வாதியின் முன்பாத்தியஸ்தரான ஜெபமணி நாடார் கிரையம்பெற்ற கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 25.05.1976 தேதியில் வாதியின் முன்பாத்தியஸ்தரான சத்திய வியாகப்பன் திருச்சபை பக்தர்கள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 27.12.2002 தேதியில் வாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 14.07.2022 தேதியில் வாதி, பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 16.07.2022 தேதியில் மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 27.07.2022 தேதியில் பிரதிவாதிகளுக்கு, வாதி அனுப்பிய கேவியட் மனு அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 29.07.2022 தேதியில் கேவியட் மனுவினை பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் கவர் (எண்ணிக்கை–2) அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.